சுருக்கம்

அறிவிப்புகள் 2022-23 – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்றப் பேரவை விதி எண்.110-ன்கீழ் அறிவிப்பு – 2022-ஆம் ஆண்டு முதல் சிறந்த கிராம ஊராட்சிகளுக்கு "உத்தமர் காந்தி விருது" வழங்குதல் – ரூ.3.80 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை

அரசாணை (நிலை) எண்.114

நாள் 11.10.2022.
சுபகிருது, புரட்டாசி 24,
திருவள்ளுவர் ஆண்டு 2053.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி.2) துறை, நாள் 05.09.2006.
2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண்.110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பு நாள் 22.04.2022.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண். 26409/2022/ப.ரா.1.1, நாள் 25.08.2022.

*****

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப்பேரவை விதி எண். 110-இன் கீழ் 22.04.2022 அன்று சட்டப்பேரவையில் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

**"கிராம ஊராட்சிகளில் வெளிப்படைத் தன்மையுடன் சிறந்த நிர்வாகத்தினை வழங்கி, அனைத்து அடிப்படை வசதிகளையும் பூர்த்தி செய்து, நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை எட்டிடும் வகையில் சிறப்பாக செயல்படும் கிராம ஊராட்சிகளுக்கு உத்தமர் காந்தி விருது 2022-ஆம் ஆண்டு முதல் மீண்டும் வழங்கப்படும்."**

2. மேலே மூன்றில் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பிய கருத்துருவில், கிராம ஊராட்சித் தலைவர்களின் தலைமைப் பண்பினை வெளிக்கொணரும் வகையிலும், ஊராட்சிகளில் சிறந்த நிர்வாகத்தினை ஏற்படுத்திடும் வகையிலும் புதுமையான முயற்சிகள் எடுத்து மிக சிறப்பாக பணியாற்றியுள்ள கிராம ஊராட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் அரசாணை (நிலை) எண்.111, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(சி2) துறை, நாள்.05.09.2006-ன்படி **உத்தமர் காந்தி விருது** அறிவிக்கப்பட்டு 2006-07 முதல் 2009-10-ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகள் வருடத்திற்கு 15 விருதுகள் வீதம் 60 கிராம ஊராட்சி தலைவர்களுக்கு நற்சான்றிதழ், கேடயம் மற்றும் ரூ.5 இலட்சத்திற்கான வெகுமதியுடன் உத்தமர் காந்தி விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர் எனத் தெரிவித்துள்ளார்.

3. இடைப்பட்ட காலத்தில் இவ்விருது வழங்கப்படாத நிலையில், இவ்விருதினை மீண்டும் இவ்வாண்டு முதல் வழங்கிடும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் என்றும் தற்போது கிராம ஊராட்சிகளில் சிறந்த நிர்வாகத்தினை ஏற்படுத்திடும் வகையிலும், புதுமையான முயற்சிகள் எடுத்து மிக சிறப்பாக பணியாற்றியுள்ள கிராம ஊராட்சித் தலைவர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், நீடித்த மற்றும் நிலைத்த வளர்ச்சி இலக்குகளை (Sustainable Development Goals) அடைய ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ள காரணிகளின் மதிப்பெண்கள் அடிப்படையில், இவ்வாண்டு முதல் மீண்டும் "**உத்தமர் காந்தி விருது**" மாவட்டத்திற்கு ஒன்று வீதம், சிறந்த 37 கிராம ஊராட்சிகளுக்கு ரூ.10 இலட்சம் வீதம், ரூ.3.70 கோடி ரூபாய் செலவில் விருதுகள் வழங்கப்பட வேண்டும் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்விருதுகளை வழங்குவதற்கு கீழ்க்கண்ட தேர்வு முறைகள் கடைபிடிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்:

I. **தேர்வு முறை:**

ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக செயல்புரிந்த 37 கிராம ஊராட்சிகள் மாநில அளவில் தேர்வு செய்யப்படும். இந்த கிராம ஊராட்சிகள் மாவட்டத்திற்கு ஒன்று வீதம் தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யும் முறையானது, முறையே வட்டார அளவில், மாவட்ட அளவில் மேற்கொள்ளப்பட்டு அதனை இயக்குநரக அளவில் கூராய்வு செய்யப்பட்டு சிறந்த 37 கிராம ஊராட்சிகளின் பட்டியல் அரசுக்கு முன்மொழியப்படும்.

கிராம ஊராட்சிகள் விருதுக்கு விண்ணப்பம் செய்ய உரிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, இவ்விருதுக்கான விண்ணப்பங்கள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் இணையதளத்தில் வெளியிடப்படும். இவ்விருதுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளவாறு மதிப்பீட்டு முறை மற்றும் மதிப்பெண்கள் பின்பற்றப்படும்.

**அ) மாவட்ட அளவிலான தேர்வு:**

விருதுக்கான அறிவிப்புகள் முறையே மாநில அளவில் வெளியிடப்பட்டவுடன், தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் கிராம ஊராட்சிகள் விருதுக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு அறிவிப்பு வெளியிடப்படும்.

உத்தமர் காந்தி விருதுக்கான கிராம ஊராட்சிகளைத் தேர்ந்தெடுத்திடும் வகையில் மாவட்ட அளவில் ஒரு குழு அமைக்கப்படும். இந்த விருது தேர்வுக் குழுவில் கீழ்க்காணும் உறுப்பினர்கள் இடம் பெறுவர்.

<u>விருதுக்கான ஊராட்சிகளைத் தேர்ந்தெடுக்கும் மாவட்டக் குழு</u>

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| 2 | திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் |
| 3 | திட்ட இயக்குநர்,<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் | உறுப்பினர். |
| 4 | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | ஒருங்கிணைப்பாளர் – உறுப்பினர் |
| 5 | அரசு சாரா நிறுவனம் -1 - | உறுப்பினர் |

இவ்வாறு அமைக்கப்படும் மாவட்ட அளவிலான குழுவின் மூலம், விண்ணப்பம் செய்த கிராம ஊராட்சிகளை மதிப்பெண்கள் அடிப்படையில், மாவட்டத்தில் சிறந்த 5 கிராம ஊராட்சிகளை தேர்வு செய்து அவற்றின் பட்டியலை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அவ்வாறு தகுதியான 5 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து அனுப்பிடும் போது பட்டியலில் அதன் விகிதம் கீழ்க்காணுமாறு இருப்பதை உறுதி செய்திட வேண்டும்:

(1) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் தலைமை வகிக்கும் கிராம ஊராட்சி - 1

(2) மகளிர் தலைமை வகிக்கும் கிராம ஊராட்சி - 1

(3) இதர சிறந்த கிராம ஊராட்சிகள் - 3

**ஆ) இயக்குநரக அளவில் பரிசீலனை மற்றும் தேர்வு:**

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் பெறப்பட்ட மொத்த கருத்துருக்களில் இருந்து, சிறந்த 37 கிராம ஊராட்சிகளின் பட்டியல் அரசுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் / ஆணையரால் முன்மொழியப்படும். இவ்வாறு இயக்குநரக அளவில் தேர்வு செய்திடும்போது இயக்குநர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அவர்களின் தலைமையில் இயக்குநரக அளவில் ஒரு உயர்மட்ட தேர்வுக்குழு (High Level Selection Committee) கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டு பரிசீலனை செய்யப்படவேண்டும்:

<u>மாநில உயர்மட்டத் தேர்வுக்குழு கீழ்க்காணும் உறுப்பினர்கள் இருப்பர்</u>

| | | |
|---|---|---|
| 1 | இயக்குநர் / ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | தலைவர் |
| 2 | கூடுதல் இயக்குநர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் | உறுப்பினர்கள்- 4 நபர்கள் |
| 3 | கூடுதல் இயக்குநர்கள், (தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்) | உறுப்பினர்கள்- 2 நபர்கள் |
| 4 | கூடுதல் இயக்குநர், (வாழ்ந்து காட்டுவோம் திட்டம்) | உறுப்பினர் |
| 5 | இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி பயிற்சி நிறுவனம், மறைமலைநகர். | உறுப்பினர் |

..5

மேற்குறிப்பிட்ட குழுவால் மாநில அளவில் உத்தமர் காந்தி விருதுக்கான கிராம ஊராட்சிகளின் இறுதிப் பட்டியல் தேர்வு செய்யப்பட்டு அரசுக்கு பரிந்துரைக்கப்படும்.

II. **விருது வழங்கல் :**

- இயக்குநரக அளவில் முன்மொழியப்பட்ட 37 கிராம ஊராட்சிகளைத் தேர்வு செய்து (மாவட்டத்திற்கு ஒன்று வீதம்) அரசால் விருது வழங்கப்படும்.
- இவ்விருது ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திரத்தினத்தன்று அல்லது ஏதேனும் ஒரு சிறப்பு தினத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கிராம ஊராட்சி வீதம் தேர்வு செய்யப்பட்டு உத்தமர் காந்தி கிராம ஊராட்சி விருதும், ரூ.10 லட்சம் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.
- பரிசுத் தொகையானது, தொடர்புடைய கிராம ஊராட்சியின் கணக்கு எண்: 1 (ஊராட்சி பொது நிதி)-க்கு வரையறுக்கப்படாத நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டு முன்னுரிமைப் பணிகளை, மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதியுடன் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

III. **நிதி ஒதுக்கீடு :**

- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கிராம ஊராட்சிக்கு விருது வழங்கப்படவுள்ளதால் மொத்தம் 37 கிராம ஊராட்சிகள் மாநில அளவில் தேர்வு செய்யப்பட உள்ளன. ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.10 இலட்சம் வீதம் மொத்த செலவினம் ரூ.3.70 கோடி (ரூபாய் மூன்று கோடியே எழுபது இலட்சம்) ஆகும்.
- மேலும், விருதுக்கான கேடயம் வழங்குதல், சான்றிதழ் தயாரித்தல், நாளிதழ்களில் விளம்பரம் செய்தல், ஊராட்சி தலைவர்களுக்கான போக்குவரத்து உள்ளிட்ட இதர நிர்வாக செலவினங்கள் மேற்கொள்ள ஏதுவாக நிர்வாக செலவினமாக ஆண்டிற்கு ரூபாய் 10 இலட்சம் கூடுதலாக அனுமதித்து ஆக மொத்தம் செலவினம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.3.80 கோடி (ரூபாய் மூன்று கோடியே எண்பது இலட்சம்) ஆகும்.

- மேலும், இதற்கான தனியானதொரு நிதித்தொகுப்பினை வழங்கிடவும், இந்த தலைப்பில் இருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் / ஆணையர் அவர்கள் நிதியைப் பெற்று தொடர்புடைய கிராம ஊராட்சிக்கு வழங்கிடவும் அனுமதி அளிக்கப்படும்.

4. எனவே, சிறந்த கிராம ஊராட்சிக்கான '**உத்தமர் காந்தி விருது**' கிராம ஊராட்சித் தலைவர்களுக்கிடையே சிறந்த தலைமைப் பண்பை ஊக்குவிக்கவும் ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கவும் சிறந்த கிராம ஊராட்சிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும் 2022ஆம் ஆண்டு முதல் மீண்டும் வழங்க ஆணை வெளியிடுமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கோரியுள்ளார். மேலும், சிறந்த கிராம ஊராட்சிகளை தேர்வு செய்வதற்கான காரணிகளை மதிப்பெண்களுடன் அனுப்பியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து அதனை ஏற்க முடிவு செய்தது. அதன்படி, கிராம ஊராட்சித் தலைவர்களுக்கிடையே சிறந்த தலைமைப் பண்பை ஊக்குவிக்கவும், ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை உருவாக்கவும், சிறந்த கிராம ஊராட்சிகளை ஊக்கப்படுத்தும் வகையிலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.10 இலட்சம் வீதம் 37 கிராம ஊராட்சிகளுக்கு, ரூ.10 இலட்சம் நிர்வாக செலவினங்கள் உட்பட, ஆண்டு ஒன்றுக்கு 3.80 கோடி ரூபாய் (ரூபாய் மூன்று கோடியே எண்பது இலட்சம் மட்டும்) செலவீட்டில், 2022-ஆம் ஆண்டு முதல் சிறந்த கிராம ஊராட்சிக்கான '**உத்தமர் காந்தி விருது**' இணைப்பில் உள்ள காரணிகளின் மதிப்பீட்டு முறை மற்றும் மதிப்பெண்கள் அடிப்படையில் தேர்வு செய்து மீண்டும் வழங்க அரசு நிதி ஒப்பளிப்பு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

2515-00-ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் – 102- சமுதாய மேம்பாடு – மாநிலச் செலவினங்கள்- KJ- முன் மாதிரி கிராம விருது – 309- உதவித் தொகை – 03- குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.

(IFHRMS த.தொ.கு: 2515 00 102 KJ 30903)

7. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் "புது துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள், நிதித் (வ.செ.பொது.1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாக கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொது.1)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2022-2023-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொது.1 / ஊ.வ) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

8. மேலே பத்தி 5-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று தொடர்புடைய தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளுக்கு பிரித்து வழங்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

9. இந்த அரசாணை நிதித் துறையின் அ.சா.எண்.26/DS(RR)/2022, நாள் 11.10.2022-ல் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.1437 (ஆயிரத்து நானூற்று முப்பத்து ஏழு) (IFHRMS ASL No.2022101437) பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி.)

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை 15.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் /
தலைமை இயக்குநர் (பயிற்சி) (முழு கூடுதல் பொறுப்பு),
சென்னை 15.

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை-34.
தலைமை செயல் அலுவலர், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சென்னை-32.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், சென்னை-105.
இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,
மறைமலைநகர், செங்கல்பட்டு.
திட்ட இயக்குநர் / உறுப்பினர் செயலர், தமிழ்நாடு கடலோர
நிலைத்த வாழ்வாதார சங்கம், சென்னை-32.
இணை இயக்குநர், தமிழ்நாடு சமூக தணிக்கைச் சங்கம், சென்னை-15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக)
அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமைகள்.

**நகல்**

அனைத்து மாவட்ட கருவூலக அலுவலர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை – 15.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் வழியாக)
நிதி (ஊ.வ. / வ.செ.பொது.I/II/வ.வ.I) துறை, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை -9.
மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மை அமைச்சரின்
அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை -9.
தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ப.பெ. [signature] 11.10.22
பிரிவு அலுவலர்

**இணைப்பு**

**அரசாணை (நிலை) எண்.114, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.2) துறை, நாள் 11.10.2022**

## உத்தமர் காந்தி விருது தேர்வு செய்வதற்கான காரணிகள்

1. வாழ்வாதாரம் நிறைந்த வறுமையற்ற கிராமம் ஏற்படுத்துதல்

| வ.எண். | குறியீடுகள் | தற்போதைய நிலை | | | சுட்டு மதிப்பு (Reference Value) | சதவீதம் | மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | வீடற்றவர்களுக்கு வீட்டு மனைப் பட்டா பெறப்பட்ட விவரம் | தகுதியுள்ள வீடற்றவர்கள் (நிலமற்றவர்கள்) எண்ணிக்கை | தகுதியுள்ள வீடற்றவர்களுக்கு வீட்டு மனை பெறப்பட்ட எண்ணிக்கை | சதவீதம் | 100% = 1 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 2 | ஊராட்சியில் நியாயவிலை கடை குடும்ப அட்டை உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்த குடும்பங்களின் எண்ணிக்கை | நியாயவிலை கடை அட்டைகள் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | சதவீதம் | 100% = 1 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 3 | ஊராட்சியில் உள்ள தகுதியுள்ள குடும்பங்களில் MGNREGS வேலை அடையாள அட்டை உள்ளோர் எண்ணிக்கை | மொத்த தகுதியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை | MGNREGS வேலை அடையாள அட்டை கோரியவர்கள் எண்ணிக்கை | MGNREGS வேலை அடையாள அட்டை வழங்கப்பட்டோர் எண்ணிக்கை/ சதவீதம் | 100% =2 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 4 | ஊராட்சியில் தகுதியுள்ள குடும்பங்களில் இருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களில் சேர்க்கப்பட்ட மகளிரின் சதவீதம் | இலக்கு மக்கள் எண்ணிக்கை | குழுவில் இணைந்தவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 100% =1 மதிப்பெண், 95-99 % =0.5 மதிப்பெண் | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ஊராட்சியில் உள்ள சுய உதவி குழுக்களில் சுழல்நிதி சமுதாய முதலீட்டு நிதி மற்றும் வங்கிக்கடன் பெற்றுள்ள குழுக்களின் விவரம் | மொத்தமுள்ள சுய உதவி குழுக்கள் எண்ணிக்கை | சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி பெறத்தகுதியான சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை | சுழல்நிதி மற்றும் சமுதாய முதலீட்டு நிதி பெற்றுள்ள சுய உதவிக் குழுக்களின் எண்ணிக்கை (சதவீதம்) | 100% =1 மதிப்பெண்,<br>95-99% =0.5 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| | | மொத்தமுள்ள சுய உதவி குழுக்கள் எண்ணிக்கை | வங்கிக்கடன் பெறத்தகுதியுள்ள சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை | வங்கிக்கடன் பெற்றுள்ள சுய உதவிக்குழுக்களின் எண்ணிக்கை (சதவீதம்) | 100% =1 மதிப்பெண்,<br>95-99% =0.5 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 2. நோயற்ற ஊராட்சி | | | | | | | |
| 1 | 14-18 வயது வரையிலான வளரிளம் பெண்களில் இரத்தசோகை சதவீதம் | மொத்தமுள்ள வளரிளம் பெண்கள் எண்ணிக்கை | இரத்த சோகை உள்ளவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 0% =1 மதிப்பெண்,<br>10% வரை =0.5 மதிப்பெண் | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களில் இரத்தசோகை சதவீதம் | கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் எண்ணிக்கை | இரத்த சோகை உள்ளவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 0% =2 மதிப்பெண்,<br>10 % வரை =1 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 3 | குழந்தைகளின் இரத்த சோகை சதவீதம் (0-14 வயது) | குழந்தைகளின் எண்ணிக்கை | இரத்த சோகை உள்ளவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 0% =2 மதிப்பெண்,<br>10 % வரை =1 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 4 | ஊராட்சியில் Nursery Garden அமைக்கப்பட்டு அதன் மூலம் கிராம ஊராட்சியில் ஊட்டச்சத்து தோட்டம் (Nutri Garden) அமைக்கப்பட்டு உள்ளதா? | மொத்தமுள்ள அங்கன்வாடிகளின் எண்ணிக்கை | ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கப்பட்டுள்ள அங்கன்வாடிகளின் எண்ணிக்கை | சதவீதம் | 100 % =1 மதிப்பெண், 100% க்கு கீழ் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| | | மொத்தமுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | ஊட்டச்சத்து தோட்டம் அமைக்கப்பட்டுள்ள பள்ளிகளின் எண்ணிக்கை | சதவீதம் | 100 % =1 மதிப்பெண், 100% க்கு கீழ் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 3. குழந்தைகள் நேய ஊராட்சி | | | | | | | |
| 1 | 5 வயதிற்கு மேற்பட்ட அனைத்து குழந்தைகளும் பள்ளிக்கு செல்கின்றனரா? | ஆம் / இல்லை | | | ஆம்=2 மதிப்பெண்,<br>இல்லை =0 மதிப்பெண் | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 3-5 வயதுடைய அனைத்து குழந்தைகளும் அங்கன்வாடிக்கு செல்கின்றனரா? | ஆம் / இல்லை | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 3 | ஊராட்சியில் குழந்தைகளுக்கு எதிராக வன்கொடுமைகள் (POCSO) சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்படாத ஊராட்சியா ? | ஆம் / இல்லை | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 4 | ஊராட்சியில் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உரிய உதவிகள் வழங்கப்பட்டு வருகிறதா? (உதவித் தொகை, கல்வி, மருத்துவம்) | 100% | 100% = 2 மதிப்பெண், 100 % க்கு குறைவாக = 0 மதிப்பெண் | | |
| 5 | ஊராட்சியில் குழந்தைகள் விளையாட்டுப் பொருட்களுடன் கூடிய விளையாட்டு மைதானம் உள்ளதா? | இருக்கிறது / இல்லை | இருக்கிறது = 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |

| 4.நீர் நிறைந்த கிராமம் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | குளம், குட்டை, ஏரி மற்றும் அனைத்து நீர் நிலைகளும் ஆக்கிரமிப்பு இன்றி முழு கொள்ளளவு உள்ளதா? | மொத்தம் | சாதனை | சதவீதம் | 100% =2 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| 2 | குளம், குட்டை, ஏரி மற்றும் அனைத்து நீர்நிலைகளும் கால்வாய்களும் தூர் வாரப்பட்டு உள்ளதா? | மொத்தம் | சாதனை | சதவீதம் | 100% =2 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| 3 | அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதா? | மொத்தம் | சாதனை | சதவீதம் | 100% =2 மதிப்பெண், 90-99 % =1 மதிப்பெண் | | |
| 4 | ஊராட்சி அளவில் நீர் இருப்பு, செலவு அறிக்கை (Water Budget) தயாரிக்கப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்=2 மதிப்பெண், இல்லை =0 மதிப்பெண் | | |
| 5 | அனைத்து பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் குடிநீர் போதுமான அளவு (as per norms) வழங்கப்பட்டு வருகிறதா? | ஆம் / இல்லை | | | ஆம்=2 மதிப்பெண், இல்லை =0 மதிப்பெண் | | |

| 5. தூய்மையான மற்றும் பசுமையான ஊராட்சி | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொதுமக்கள் வெளியில் மலம் கழித்தலற்ற கிராம ஊராட்சியா? | ஆம்/இல்லை | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 2 | அனைத்து வீடுகளிலும் மக்கும், மக்காத குப்பை தனித்தனியே பிரிக்கப்பட்டு தூய்மை காவலர்களிடம் வழங்கப்படுகிறதா? | ஆம் / இல்லை | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 3 | திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை பணிகள் முழுமையாக (Saturation model) நிறைவேற்றப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 4 | வீட்டுக்கு இரண்டு மரம் என்ற வகையில் மரம் நடுதல் கணக்கிட்டு நடப்பு ஆண்டில் நடப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | வீட்டிற்கு 2 மரங்கள் = 2 மதிப்பெண், வீட்டிற்கு 1 மரம் = 1 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | a) ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியக்கூடிய நெகிழி உபயோகம் தடைசெய்யப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண் | | |
| | b) மீறுபவர்களிடம் தண்டம் வசூலிக்கப்பட்டுள்ளதா ?<br>ஆம் எனில் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டுள்ளது. | ஆம் / இல்லை | | | ஆம்=1 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண்<br><br>வசூலிக்கப்பட்ட தொகை<br>= ________ | | |
| 6 | திட, திரவ, கழிவு மேலாண்மை, பிரித்து Compost உர விற்பனை செய்யப்படுகிறதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண்<br><br>மொத்த திட கழிவு Compost உரம் விற்பனை செய்யப்பட்ட தொகை<br>________ | | |
| 6. அடிப்படை வசதிகளில் தன்னிறைவு பெற்ற ஊராட்சி | | | | | | | |
| 1 | கிராம ஊராட்சியில் உள்ள மொத்த தெருவிளக்குகளின் எண்ணிக்கை? | மொத்த தெரு விளக்குகள் | எரியும் தெரு விளக்குகள் | சதவீதம் | 100% = 2 மதிப்பெண்,<br>90-99% =1மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 2 | கிராம ஊராட்சியின் அனைத்து குக்கிராமங்களும் தார் சாலை வசதி மூலம் இணைப்பப்பட்டுள்ளதா ? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண் | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | ஊராட்சியில் இளைஞர்கள் பயன்படும் வகையில் விளையாட்டு மைதானங்கள் உள்ளனவா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 4 | ஊராட்சியில் மக்கள் பயன்பாட்டிற்கென நூலகங்கள் புனரமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளனதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 5 | ஊராட்சியில் இணையவழி சேவைகள் மையம் உள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 7. சமூக பாதுகாப்பு உறுதி செய்யப்பட்ட ஊராட்சி | | | | | | | |
| 1 | 18-வயதிற்கு மேற்பட்ட 35-வயதிற்குட்பட்ட வேலையில்லா இளைஞர்கள் அனைவருக்கும் திறன் சார்ந்த(skilled training) பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா? | மொத்தம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை | சதவீதம் | 100% = 2 மதிப்பெண், 95- 99 % =1மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 2 | ஊராட்சியில் தகுதியுள்ள வயது முதிர்ந்தோர் அனைவருக்கும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறதா? | தகுதியுள்ள மொத்த முதியோர் | முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | சதவீதம் | 100% = 2 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் = 0 மதிப்பெண் | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | அனைத்து அமைப்பு சாரா தொழிலாளர்களும் அவர்களின் நல வாரியத்தில் பதிவு செய்துள்ளனரா? | மொத்த தொழிலாளர்கள் | பதிவு செய்தவர்கள் | சதவீதம் | 100% =1 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 4 | a) ஊராட்சியில் மொத்த மாற்றுத்திறனாளிகளில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளனரா? | மொத்த மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை | சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்துள்ளவர்கள் | சதவீதம் | 100% =1 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| | b) ஊராட்சியில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவி பெறும் மாற்றுத்திறனாளிகள் சதவீதம் | மொத்த மாற்றுத்திறனாளிகள் எண்ணிக்கை | உதவி பெறுபவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 100% =1 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | ஊராட்சியில் உள்ள ஆதரவற்ற விதவைகளுக்கு சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறதா? | தகுதியுள்ள ஆதரவற்ற பெண்கள் எண்ணிக்கை | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | சதவீதம் | 100% =1 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக<br>இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 8. சிறந்த ஆளுமைக்கொண்ட ஊராட்சி | | | | | | | |
| 1 | ஊராட்சி மன்றக்கூட்டங்கள் முறையாக கூட்டப்படுகின்றனவா? ஒரு ஆண்டில் எத்தனை முறை கூட்டப்பட்டுள்ளது? | கூட்டப் பட வேண்டிய கூட்டங்களின் எண்ணிக்கை | கூட்டப்பட்டவைகளின் எண்ணிக்கை | சதவீதம் | 100% =2 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக<br>இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 2 | a) கிராம வளர்ச்சித் திட்ட அறிக்கை அனைத்துத் துறைகளின் ஈடுபாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்=2 மதிப்பெண்,<br>இல்லை =0 மதிப்பெண் | | |
| | b) கிராம வளர்ச்சித் திட்ட அறிக்கை ஒவ்வொரு ஆண்டும் தயாரிக்கப்பட்டு, பதிவேற்றம் செய்யப்படுகிறதா? | ஆம் / இல்லை | | | ஆம்=2 மதிப்பெண்,<br>இல்லை =0 மதிப்பெண் | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | a) அனைத்து வரி விதிப்பும் 100% மதிப்பீடு (assesment) செய்யப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண் | | |
| | b) அனைத்து வரி விதிப்பு 100% வசூல் செய்யப்பட்டுள்ளதா? | கேட்பு தொகை | வசூல் தொகை | சதவீதம் | 100% = 2 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் = 0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 4 | a) ஊராட்சியில் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து சொத்துக்களும் பதிவு செய்யப்பட்டு பதிவேடுகள் பராமரிக்கப்படுகிறதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண் | | |
| | b) ஊராட்சியின் அனைத்து சொத்துக்களும் உரிய கால இடைவெளியில் பராமரிப்பு செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 2 மதிப்பெண்,<br>இல்லை = 0 மதிப்பெண் | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 5 | a) ஊராட்சியின் அனைத்து நிலைக் குழுக்களும் அமைக்கப்பட்டு, செயல்பாட்டில் உள்ளதா? | ஆம் / இல்லை | | | ஆம்= 1 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| | b) கடந்த ஆண்டில் ஊராட்சியின் அனைத்து நிலைக் குழுக்களின் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்ட எண்ணிக்கை | நடத்தப்பட வேண்டியது | நடத்தப்பட்டது | சதவீதம் | 100% =1 மதிப்பெண், 100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | 6 | - | | | | |
| | | (நியமனக்குழு தவிர மற்ற நிலைக் குழுக்கள் | | | | | |
| 6 | கடந்த நிதியாண்டில் ஊராட்சிக்கு சொந்த கூடுதல் வருவாய் (Own Source Revenue) ஈட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா? | முந்தைய ஆண்டு | விருதுக்கான ஆண்டு | கூடுதல் சதவீதம் | முந்தைய ஆண்டை விட 30% உயர்வு = 2 மதிப்பெண் 20% உயர்வு = 1 மதிப்பெண் 20% க்கு குறைவாக இருப்பின் = 0 மதிப்பெண் | | |
| 9. பாலின சமத்துவம் கொண்ட ஊராட்சி | | | | | | | |
| 1 | a) பிறப்பின் போதான பாலின விகிதத்தின் படி பெண்களுக்ககான விகிதம் | மொத்த பிறப்பு எண்ணிக்கை | பெண் குழந்தைகள் பிறப்பு எண்ணிக்கை | பாலின விகிதம் | 1000 க்கு மேல் = 2 மதிப்பெண், 990 க்கு மேல் = 1 மதிப்பெண், | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | b) 0-6 வயது வரை உள்ள குழந்தைகளின் பாலின விகிதம் | மொத்த குழந்தைகளின் எண்ணிக்கை | பெண் குழந்தைகளின் எண்ணிக்கை | பாலின விகிதம் | 1000 க்கு மேல் =2 மதிப்பெண்,<br>990 க்கு மேல் =1 மதிப்பெண், | | |
| | | | | | | | |
| 2 | ஊராட்சியில் மகளிரின் பாதுகாப்பிற்கு எதிராக வீடுகளில் / பொது இடங்களில் பாலியல் தொந்தரவுகள் குறித்த அனைத்து புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? | ஆம் / இல்லை | | | 100% =2 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | புகார்கள் எண்ணிக்கை | | நடவடிக்கை எடுக்கப்பட்டவை | | | |
| 3 | பெண் குழந்தைகள் அனைவரும் பள்ளி மேல்நிலைப்படிப்பு முடித்தல் உறுதி செய்யப்பட்டுள்ளதா? | 17 - 18 வயது நிரம்பிய பெண் குழந்தைகள் எண்ணிக்கை | மேல்நிலைப் பள்ளி படிப்பு முடித்தவர்கள் எண்ணிக்கை | சதவீதம் | 100% =1 மதிப்பெண்,<br>100 % க்கு குறைவாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| 10. ஊட்டச்சத்து குறைபாடில்லா கிராம ஊராட்சி | | | | | | | |
| 1 | 0-6 வயது உடைய குழந்தைகளில் கடும் எடை குறைபாடுடைய குழந்தைகள் நிலை | 0-6 வயது உடைய குழந்தைகளின் எண்ணிக்கை | 0-6 வயது உடைய கடும் எடை குறைபாடுடைய குழந்தைகளின் எண்ணிக்கை | சதவீதம் | 0% =2 மதிப்பெண்,<br>0% க்கு கூடுதலாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 2 | 0-6 வயது உடைய குழந்தைகளில் கடும் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் நிலை | 0-6 வயது உடைய குழந்தைகளின் எண்ணிக்கை | 0-6 வயது உடைய குழந்தைகளில் கடும் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் எண்ணிக்கை | சதவீதம் | 0% =2 மதிப்பெண், 0% க்கு கூடுதலாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 3 | 0-6 வயது உடைய குழந்தைகளில் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் நிலை | 0-6 வயது உடைய குழந்தைகளின் எண்ணிக்கை | 0-6 வயது உடைய குழந்தைகளில் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் எண்ணிக்கை | சதவீதம் | 0% =2 மதிப்பெண், 0% க்கு கூடுதலாக இருப்பின் =0 மதிப்பெண் | | |
| | | | | | | | |
| 4 | வளரிளம் பெண்கள் அனைவருக்கும் இரத்த பரிசோதனை செய்யப்பட்டு அனீமியாவிற்கான சத்து மாத்திரைகள் வழங்கப்படுகிறதா? | மொத்தம் | சாதனை | சதவீதம் | 100% = 2 மதிப்பெண், 80% க்கு மேல்: 1 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| 5 | அனைத்து வீடுகளிலும் சத்துணவு தோட்டம் அமைக்கப்பட்டு முருங்கை / பப்பாளி மரங்கள் வளர்க்கப்படுகிறதா ? | மொத்தம் | சாதனை | சதவீதம் | 100% = 2 மதிப்பெண், 80% க்கு மேல்: 1 மதிப்பெண், இல்லை = 0 மதிப்பெண் | | |
| பெற்ற மொத்த மதிப்பெண்கள் | | | | | | | |

பெ.அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பே.ரே.[illegible] 11.10.22
பிரிவு அலுவலர்.